ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ரு'தி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருநெடுந்தாண்டகம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருநெடுந்தாண்டகம் ॥

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் எந்தையின் திருவடிகள் என் தலைமேலுள்ளன

‡மின் உருவாய் முன் உருவில் வேதம் நான்காய்⋆
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்⋆
பின் உருவாய் முன் உருவில் பிணி மூப்பில்லாப்⋆
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது⋆ எண்ணும்
பொன் உருவாய் மணி உருவில் பூதம் ஐந்தாய்ப்⋆
புனல் உருவாய் அனல் உருவில் திகழும் சோதி⋆
தன் உருவாய் என் உருவில் நின்ற எந்தை⋆
தளிர் புரையும் திருவடி என் தலை மேலவே (1)

பார் உருவில் நீர் எரிகால் விசும்புமாகிப்⋆
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற⋆
ஏர் உருவில் மூவருமே என நின்ற⋆
இமையவர் தம் திருவுரு வேறெண்ணும் போது⋆
ஓர் உருவம் பொன் உருவம் ஒன்று செந்தீ⋆
ஒன்று மா கடல் உருவம் ஒத்து நின்ற⋆
மூவுருவும் கண்ட போதொன்றாம் சோதி⋆
முகில் உருவம் எம் அடிகள் உருவந் தானே (2)

திருவடிவில் கரு நெடுமால் சேயன் என்றும்⋆
திரேதைக்கண் வளை உருவாய்த் திகழ்ந்தான் என்றும்⋆
பெரு வடிவில் கடல் அமுதம் கொண்ட காலம்⋆
பெருமானைக் கரு நீல வண்ணன் தன்னை⋆
ஒரு வடிவத்தோர் உருவென்றுணரல் ஆகாது⋆
ஊழிதோறூழி நின்றேத்தல் அல்லால்⋆
கரு வடிவில் செங்கண்ண வண்ணன் தன்னைக்⋆
கட்டுரையே யார் ஒருவர் காண்கிற்பாரே (3)

www.prapatti.com

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை⋆
    இரு நிலம் கால் தீ நீர் விண் பூதம் ஐந்தாய்⋆
செந்திறத்த தமிழ் ஓசை வடசொல் ஆகித்⋆
    திசை நான்குமாய்த் திங்கள் ஞாயிறாகி⋆
அந்தரத்தில் தேவர்க்கும் அறியல் ஆகா
    அந்தணனை⋆ அந்தணர் மாட்டந்தி வைத்த
மந்திரத்தை⋆ மந்திரத்தால் மறவாதென்றும்⋆
    வாழுதியேல் வாழலாம் மட நெஞ்சமே (4)

ஒண் மிதியில் புனல் உருவி ஒரு கால் நிற்ப⋆
    ஒரு காலும் காமரு சீர் அவுணன் உள்ளத்து⋆
எண் மதியும் கடந்தண்ட மீது போகி⋆
    இரு விசும்பினூடு போய் எழுந்து⋆ மேலைத்
தண் மதியும் கதிரவனும் தவிர ஓடித்⋆
    தாரகையின் புறம் தடவி அப்பால் மிக்கு⋆
மண் முழுதும் அகப்படுத்து நின்ற எந்தை⋆
    மலர் புரையும் திருவடியே வணங்கினேனே (5)

அலம்புரிந்த நெடுந் தடக்கை அமரர் வேந்தன்⋆
    அஞ்சிறைப் புள் தனிப் பாகன் அவுணர்க்கென்றும்⋆
சலம் புரிந்தங்கருள் இல்லாத் தன்மை யாளன்⋆
    தான் உகந்த ஊர் எல்லாம் தன் தாள் பாடி⋆
நிலம் பரந்து வரும் கலுழிப் பெண்ணை ஈர்த்த⋆
    நெடு வேய்கள் படு முத்தம் உந்த உந்தி⋆
புலம் பரந்து பொன் விளைக்கும் பொய்கை வேலிப்⋆
    பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே! (6)

வற்புடைய வரை நெடுந் தோள் மன்னர் மாள⋆
    வடி வாய மழுவேந்தி உலகம் ஆண்டு⋆
வெற்புடைய நெடுங்கடலுள் தனி வேல் உய்த்த⋆
    வேள் முதலா வென்றான் ஊர் விந்தம் மேய⋆
கற்புடைய மடக் கன்னி காவல் பூண்ட⋆
    கடி பொழில் சூழ் நெடு மறுகில் கமல வேலி⋆

பொற்புடைய மலை அரையன் பணிய நின்ற⋆
    பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சே! (7)

‡நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!⋆
    நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்⋆ ஒண் துறை நீர் வெஃகா உள்ளாய்!⋆
    உள்ளுவார் உள்ளத்தாய்⋆ உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத்துள்ளாய்! கள்வா!⋆
    காமரு பூங்காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய்⋆ பேராதென் நெஞ்சின் உள்ளாய்!⋆
    பெருமான் உன் திருவடியே பேணினேனே (8)

வங்கத்தால் மா மணி வந்துந்து முந்நீர்
    மல்லையாய்!⋆ மதிள் கச்சி ஊராய்! பேராய்⋆
கொங்கத்தார் வளங்கொன்றை அலங்கல் மார்வன்⋆
    குலவரையன் மடப் பாவை இடப்பால் கொண்டான்⋆
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!⋆
    பனி வரையின் உச்சியாய்! பவள வண்ணா⋆
எங்குற்றாய் எம் பெருமான்! உன்னை நாடி⋆
    ஏழையேன் இங்ஙனமே உழிதருகேனே! (9)

பொன் ஆனாய்! பொழில் ஏழும் காவல் பூண்ட
    புகழ் ஆனாய்!⋆ இகழ்வாய தொண்டனேன் நான்⋆
என் ஆனாய் என் ஆனாய் என்னல் அல்லால்⋆
    என் அறிவன் ஏழையேன்⋆ உலகம் ஏத்தும்
தென் ஆனாய் வட ஆனாய் குடபால் ஆனாய்⋆
    குணபால மதயானாய் இமையோர்க்கென்றும்
முன் ஆனாய்⋆ பின் ஆனார் வணங்கும் சோதி!⋆
    திருமூழிக் களத்தானாய் முதல் ஆனாயே! (10)

பட்டுடுக்கும் அயர்த்திரங்கும் பாவை பேணாள்⋆
    பனி நெடுங்கண் நீர் ததும்பப் பள்ளி கொள்ளாள்⋆
எள் துணைப் போதென் குடங்கால் இருக்ககில்லாள்⋆
    எம் பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்⋆

www.prapatti.com

மட்டு விக்கி மணி வண்டு முரலும் கூந்தல்⋆
    மட மானை இது செய்தார் தம்மை⋆ மெய்யே
கட்டுவிச்சி சொல் என்னச் சொன்னாள் நங்காய்!⋆
    கடல் வண்ணர் இதுசெய்தார் காப்பார் ஆரே (11)

நெஞ்சுருகிக் கண் பனிப்ப நிற்கும் சோரும்⋆
    நெடிதுயிர்க்கும் உண்டறியாள் உறக்கம் பேணாள்⋆
நஞ்சரவில் துயில் அமர்ந்த நம்பீ! என்னும்⋆
    வம்பார் பூம் வயல் ஆலி மைந்தா என்னும்⋆
அஞ்சிறைய புட்கொடியே ஆடும் பாடும்⋆
    அணி அரங்கம் ஆடுதுமோ தோழீ என்னும்⋆
என் சிறகின் கீழ் அடங்காப் பெண்ணைப் பெற்றேன்⋆
    இரு நிலத்தோர் பழி படைத்தேன் ஏ பாவம்மே! (12)

கல் எடுத்துக் கல் மாரி காத்தாய்! என்றும்⋆
    காமரு பூங்கச்சி ஊரகத்தாய்! என்றும்⋆
வில் இறுத்து மெல்லியல் தோள் தோய்ந்தாய்! என்றும்⋆
    வெஃகாவில் துயில் அமர்ந்த வேந்தே! என்றும்⋆
மல் அடர்த்து மல்லரை அன்றட்டாய்! என்றும்⋆
    மா கீண்ட கைத்தலத்தென் மைந்தா! என்றும்⋆
சொல் எடுத்துத் தன் கிளியைச் சொல்லே என்று⋆
    துணைமுலை மேல் துளிசோரச் சோர்கின்றாளே! (13)

‡முளைக் கதிரைக் குறுங்குடியுள் முகிலை⋆ மூவா
    மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற⋆
அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய
    அந்தணனை⋆ அந்தணர் தம் சிந்தை யானை⋆
விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்⋆
    வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு⋆
வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக! என்று⋆
    மடக் கிளியைக் கை கூப்பி வணங்கினாளே (14)

கல் உயர்ந்த நெடு மதிள் சூழ் கச்சி மேய
    களிறென்றும்⋆ கடல் கிடந்த கனியே! என்றும்⋆



www.prapatti.com

அல்லியம் பூ மலர்ப் பொய்கைப் பழன வேலி⋆
அணி அழுந்தூர் நின்றுகந்த அம்மான் என்றும்⋆
சொல் உயர்ந்த நெடு வீணை முலை மேல் தாங்கித்⋆
தூ முறுவல் நகை இறையே தோன்றநக்கு⋆
மெல் விரல்கள் சிவப்பெய்தத் தடவி ஆங்கே⋆
மென் கிளி போல் மிக மிழற்றும் என் பேதையே (15)

‡கன்று மேய்த்தினிதுகந்த காளாய்! என்றும்⋆
கடி பொழில் சூழ் கணபுரத்தென் கனியே! என்றும்⋆
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்⋆
வட திருவேங்கடம் மேய மைந்தா! என்றும்⋆
வென்றசுரர் குலம் களைந்த வேந்தே! என்றும்⋆
விரி பொழில் சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும்⋆
துன்று குழல் கருநிறத்தென் துணையே என்றும்⋆
துணை முலைமேல் துளி சோரச் சோர்கின்றாளே! (16)

பொங்கார் மெல் இளங்கொங்கை பொன்னே பூப்பப்⋆
பொரு கயல் கண் நீர் அரும்பப் போந்து நின்று⋆
செங்கால மடப் புறவம் பெடைக்குப் பேசும்⋆
சிறு குரலுக்குடல் உருகிச் சிந்தித்து⋆ ஆங்கே
தண் காலும் தண் குடந்தை நகரும் பாடித்⋆
தண் கோவலூர் பாடி ஆடக் கேட்டு⋆
நங்காய்! நம் குடிக்கிதுவோ நன்மை என்ன⋆
நறையூரும் பாடுவாள் நவில்கின்றாளே! (17)

கார் வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்⋆
கைத்தலமும் அடி இணையும் கமல வண்ணம்⋆
பார் வண்ண மட மங்கை பத்தர்⋆ பித்தர்
பனி மலர் மேல் பாவைக்குப் பாவம் செய்தேன்⋆
ஏர் வண்ண என் பேதை என்சொல் கேளாள்⋆
எம் பெருமான் திருவரங்கம் எங்கே என்னும்⋆
நீர் வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்⋆
இதுவன்றோ நிறை அழிந்தார் நிற்குமாறே (18)

முற்றாரா வன முலையாள் பாவை⋆ மாயன்
    மொய் அகலத்துள் இருப்பாள் அஃதும் கண்டும்
அற்றாள்⋆ தன் நிறை அழிந்தாள் ஆவிக்கின்றாள்⋆
    அணி அரங்கம் ஆடுதுமோ தோழீ! என்னும்⋆
பெற்றேன் வாய்ச் சொல் இறையும் பேசக் கேளாள்⋆
    பேர் பாடித் தண் குடந்தை நகரும் பாடி⋆
பொற்றாமரைக் கயம் நீராடப் போனாள்⋆
    பொருவற்றாள் என் மகள் உம் பொன்னும் அஃதே (19)

தேராளும் வாள் அரக்கன் செல்வம் மாளத்⋆
    தென் இலங்கை முன் மலங்கச் செந்தீ ஒல்கி⋆
போராளன் ஆயிரந் தோள் வாணன் மாளப்⋆
    பொரு கடலை அரண் கடந்து புக்கு மிக்க
பாராளன்⋆ பார் இடந்து பாரை உண்டு⋆
    பார் உமிழ்ந்து பார் அளந்து பாரை ஆண்ட
பேராளன்⋆ பேர் ஓதும் பெண்ணை மண்மேல்⋆
    பெருந் தவத்தள் என்றல்லால் பேசலாமே (20)

‡மை வண்ண நறுங்குஞ்சிக் குழல் பின் தாழ⋆
    மகரம் சேர் குழை இருபாடிலங்கி ஆட⋆
எய் வண்ண வெஞ்சிலையே துணையா⋆ இங்கே
    இருவராய் வந்தார் என் முன்னே நின்றார்⋆
கை வண்ணம் தாமரை வாய் கமலம் போலும்⋆
    கண் இணையும் அரவிந்தம் அடியும் அஃதே⋆
அவ் வண்ணத்தவர் நிலைமை கண்டும் தோழீ!⋆
    அவரை நாம் தேவர் என்றஞ்சினோமே! (21)

நைவளம் ஒன்றாராயா நம்மை நோக்கா⋆
    நாணினார் போல் இறையே நயங்கள் பின்னும்⋆
செய்வளவில் என் மனமும் கண்ணும் ஓடி⋆
    எம் பெருமான் திருவடிக்கீழ் அணைய⋆ இப்பால்
கைவளையும் மேகலையும் காணேன்⋆ கண்டேன்
    கன மகரக் குழை இரண்டும் நான்கு தோளும்⋆

www.prapatti.com

எவ்வளவுண்டெம் பெருமான் கோயில் என்றேற்கு⋆
    இதுவன்றோ எழில் ஆலி என்றார் தாமே (22)

உள்ளூரும் சிந்தை நோய் எனக்கே தந்து⋆ என்
    ஒளி வளையும் மா நிறமும் கொண்டார் இங்கே⋆
தெள்ளூரும் இளந் தெங்கின் தேறல் மாந்திச்⋆
    சேல் உகளும் திருவரங்கம் நம் ஊர் என்ற⋆
கள்ளூரும் பைந் துழாய் மாலை யானைக்⋆
    கனவிடத்தில் யான் காண்பன் கண்ட போது⋆
புள்ளூரும் கள்வா நீ போகேல் என்பன்⋆
    என்றாலும் இது நமக்கோர் புலவி தானே (23)

இரு கையில் சங்கிவை நில்லா எல்லே பாவம்!⋆
    இலங்கொலி நீர் பெரும் பௌவம் மண்டி உண்ட⋆
பெரு வயிற்ற கரு முகிலே ஒப்பர் வண்ணம்⋆
    பெருந் தவத்தர் அருந் தவத்து முனிவர் சூழ⋆
ஒரு கையில் சங்கொரு கை மற்றாழி ஏந்தி⋆
    உலகுண்ட பெரு வாயர் இங்கே வந்து⋆ என்
பொரு கயற் கண் நீர் அரும்பப் புலவி தந்து⋆
    புனல் அரங்கம் ஊர் என்று போயினாரே! (24)

மின் இலங்கு திருவுருவும் பெரிய தோளும்⋆
    கரி முனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்⋆
தன் அலர்ந்த நறுந் துழாய் மலரின் கீழே⋆
    தாழ்ந்திலங்கும் மகரம் சேர் குழையும் காட்டி⋆
என் நலனும் என் நிறையும் என் சிந்தையும்⋆
    என் வளையும் கொண்டென்னை ஆளும் கொண்டு⋆
பொன் அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலினூடே⋆
    புனல் அரங்கம் ஊர் என்று போயினாரே! (25)

தே மருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்⋆
    தேன் அதனை வாய்மடுத்துன் பெடையும் நீயும்⋆
பூ மருவி இனிதமர்ந்து பொறியில் ஆர்ந்த⋆
    அறு கால சிறு வண்டே! தொழுதேன் உன்னை⋆

www.prapatti.com

ஆ மருவி நிரை மேய்த்த அமரர் கோமான்⋆
அணி அழுந்தூர் நின்றானுக்கின்றே சென்று⋆
நீ மருவி அஞ்சாதே நின்றோர் மாது⋆
நின் நயந் தாள் என்றிறையே இயம்பிக் காணே (26)

‡செங்கால மட நாராய்! இன்றே சென்று⋆
திருக் கண்ணபுரம் புக்கென் செங்கண் மாலுக்கு⋆
என் காதல் என் துணைவர்க்குரைத்தி ஆகில்⋆
இதுவொப்பதெமக்கின்பம் இல்லை⋆ நாளும்
பைங்கானம் ஈதெல்லாம் உனதே ஆகப்⋆
பழன மீன் கவர்ந்துண்ணத் தருவன்⋆ தந்தால்
இங்கே வந்தினிதிருந்துன் பெடையும் நீயும்⋆
இரு நிலத்தில் இனிதின்பம் எய்தலாமே (27)

தென் இலங்கை அரண் சிதறி அவுணன் மாளச்⋆
சென்றுலகம் மூன்றினையும் திரிந்தோர் தேரால்⋆
மன் இலங்கு பாரதத்தை மாள ஊர்ந்த⋆
வரை உருவின் மா களிற்றைத் தோழீ⋆ என்தன்
பொன் இலங்கு முலைக் குவட்டில் பூட்டிக் கொண்டு⋆
போகாமை வல்லேனாய்ப் புலவி எய்தி⋆
என்னில் அங்கம் எல்லாம் வந்தின்பம் எய்த⋆
எப்பொழுதும் நினைந்துருகி இருப்பன் நானே (28)

‡அன்றாயர் குலமகளுக்கரையன் தன்னை⋆
அலை கடலைக் கடைந்தடைத்த அம்மான் தன்னை⋆
குன்றாத வலி அரக்கர் கோனை மாளக்⋆
கொடும் சிலைவாய்ச் சரம் துரந்து குலம் களைந்து
வென்றானை⋆ குன்றெடுத்த தோளினானை⋆
விரி திரை நீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானை⋆ தண் குடந்தைக் கிடந்த மாலை⋆
நெடியானை அடி நாயேன் நினைந்திட்டேனே (29)

‡மின்னு மா மழை தவழும் மேக வண்ணா!⋆
விண்ணவர் தம் பெருமானே! அருளாய் என்று⋆



www.prapatti.com

அன்னமாய் முனிவரோடமரர் ஏத்த⋆
    அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை⋆
மன்னு மா மணி மாட மங்கை வேந்தன்⋆
    மான வேல் பர காலன் கலியன் சொன்ன⋆
பன்னிய நூல் தமிழ் மாலை வல்லார்⋆ தொல்லைப்
    பழவினையை முதல் அரிய வல்லார் தாமே (30)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com